[1987 மே 4

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலை நிர்ணயம் செய்வதை எப்போது வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். அரசு நிர்ணயிக்கின்ற தொகையைக் குடிசை மாற்று வாரியம் செலுத்த வேண்டும் என்ற ஒப்பந்தத்தின் பெயரில் குறிப்பிட்ட இடத்தில் குடிசை மாற்று வாரியம் பணிகளைத் துவங்குவதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி தம் பணியாளர்களுக்கு 25 சதவிதம் கட்ட வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தது. அதைக்கூட ஒப்புக்கொண்டு விலை பின்னால் என்ன நிர்ணயம் செய்யப்படுகிறதோ அதைக் குடிசை மாற்று வாரியம் தரும். ஆனால், அந்த இடத்தை முதலிலே குடிசை மாற்று வாரியத்திற்குத் தாருங்கள் என்று கேட்டு மாநகராட்சிக்கு எழுதியிருக்கிறோம். அந்த வகையில்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. முதலிலே அந்த இடத்தைப் பெற்று, அதற்குப் பிறகு குடியிருப்புகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

(உ) கந்தர்வகோட்டை, புதுக்கோட்டை ஒன்றியங்களில் சில மேல்நிலைத் தொட்டிகளுக்கு மின் இணைப்பு வழங்காதது.

திரு. ஜே. முகம்மது கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டம். கந்தர்வ கோட்டை மற்றும் புதுக்கோட்டை ஒன்றியங்களில் சில ஊர்களில் ஓராண்டுக்கு முன் கட்டப்பட்ட மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு இதுவரை மின்இணைப்பு வழங்கப்படாதது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

1987 மே 4]

அறிக்கை.

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வ கோட்டை மற்றும் புதுக்கோட்டை ஒன்றியங்களில் சிறு ஊர்களில் ஓராண்டுக்கு முன் விண்ணப்பம் பெறப்பட்ட எல்லா மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கும் மின் இணைப்பு ஏற்கெனவே வழங்கப்பட்டு விட்டது. இதுவரை மின் இணைப்பு வேண்டி மேல் நிலைத் தொட்டிகளுக்கான மனுக்கள் எதுவும் வாரியத்திடம் நிலுவையில் இல்லை. எனினும் பெருங்களூரிலுள்ள மேல்நிலைத் தொட்டிக்கான மின்இணைப்பு சம்பந்தமான எல்லா வேலைகளும் தமிழ்நாடு மின்சார வாரியத்தால் முடிக்கப்பட்டு விட்டன. ஆனால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மின் இணைப்பு எடுத்துக் கொள்ள இதுவரை முன்வரவில்லை.

திரு. ஜே. முகம்மது கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கவன ஈர்ப்பு கொடுத்ததற்குக் காரணம கந்தர்வகோட்டை ஒன்றியத்தில், கந்தர்வகோட்டை, ஈாடிப்பட்டு, சந்தம்பட்டி, துவா, அரவணைப்பட்டி போன்ற ஊர்களுக்கும், புதுக்கோட்டை ஒன்றியத்திலே வடவாளம் ஊராட்சியில் தண்ணீர் பந்தல்பட்டி, 9-பி நத்தம் பண்ணை, எல்லைப்பட்டி, கவிநாடு கிழக்கு, ஆட்டாங்குடி, திருநாவல்பட்டி, பெருங்களூர் போன்ற பகுதிகளிலே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி ஓராண்டு ஆகியும் மின் இணைப்புத் தரவில்லை என்பதுதான். அதற்கு அமைச்சர் அவர்கள் அளித்த அறிக்கையில் அதில் பெருங்களூருக்கு மட்டும் தரப்படவில்லை என்று பதில் கொடுத்திருக்கிறார்கள். நேற்றையதினம அந்த இடங்களுக்குச் சென்று நான் பார்க்கும்போது தண்ணீர் பந்தல், எல்லைப்பட்டி போன்ற பகுதிகளிலேயும் நேற்றையதினம் வரைக்கும்கூட மின் இணைப்புத் தரப்படவில்லை. தவறான தகவலை நம்முடைய அதிகாரிகள் தந்திருக்கிறார்கள். இந்த ஊர்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு உடனடியாக மின் இணைப்பு வழங்குவதற்கும், தவறான தகவல் அளித்த அதிகாரிகள்மீது நடவடிக்கையெடுக்கவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 11-10)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கந்தர்வகோட்டை ஒன்றியம், புதுக்கோட்டை ஒன்றியம் ஆகிய இரண்டிலும் சில ஊர்களில் ஓராண்டிற்கு முன்னால் கட்டப்பட்ட மேல்நிலைத் தொட்டிகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கவில்லையென்று சொன்னார்கள். ஆனால் பதிலில் ஓராண்டிற்கு முன்னால் கட்டப்பட்ட தொட்டிகளுக்கு எல்லா இடங்களிலும் மின் இணைப்பு கொடுக்கப்பட்டதாகவும், மேற்கொண்டு மின் இணைப்புக் கேட்டு மனு எதுவுமில்லையென்றும் தகவல் கொடுத்திருக்கிறார்கள். தவறான தகவல் கொடுத்திருந்தால் அவர்கள்மீது தக்க நடவடிக்கையெடுக்கப்படும் என்பதுடன், இதுவரையில் மின்னிணைப்புக் கொடுக்காத மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளுக்கு உடனடியாக மின்னிணைப்புக் கொடுக்கவும் நடவடிக்கையெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. முகம்மது கனி : தலைவர் அவர்களே, மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டும் பணியில் மூன்று துறைகள் இணைந்து செயல்பட வேண்டியுள்ளது. குடிநீர் வடிகால் வாரியம், மின் வாரியம் ஆகிய இரண்டு துறைகளும் வேலையை முடித்து உள்ளாட்சித் துறையிடம் ஒப்படைக்க வேண்டும். பல இடங்களில் இந்தத் துறைகள் ஒன்றாகச் சேர்ந்து பணியாற்ற வாய்ப்பில்லாமல் இருக்கிறது. ஆகவே இந்த மூன்று துறைகளும் ஒன்றாகச் சேர்ந்து பணியாற்றுகிற வகையில் ஏதாவது ஒரு சிறப்புத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இப்போது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியத் தலைவர்கள், துணைத் தலைவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட இடங்களில் பணியை நிறைவேற்றுவதற்கு, இந்த மூன்று துறைகளையும் ஒன்றுபடுத்துவதற்கு, டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்ட் ஆபீசர்கள் இருக்கிறார்கள். அப்படியும் பிரச்சினை இருக்குமானால் இந்த மூன்று துறைகளையும் இணைத்து விரைவில் செயல்படுவதற்கு சிறப்பான நடவடிக்கை, சம்பந்தப்பட்ட அமைச்சர்களைக் கலந்துகொண்டு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.